Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 8/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW5 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | பழனிச்சாமி சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father's Name | – | நாகமுத்து |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 12th September 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1, A3 to A6 absent. 317 Petition filed and allowed. A2 absent.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது பொள்ளாச்சி தாலுகா காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.08.2013 ம் தேதி நான் கிழக்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்த போது மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் திரு., சுப்பிரமணியன் இரவுரோந்து பணியில் இருந்த போதுவாகனத்தணிக்கை அலுவலுக்கு சுமார் 3 மணியளவில் கோவை ரோடு நல்லப்பா தியேட்டர் ஜங்ஷன் வரும்படி அழைத்தார்.

2. நான் நல்லப்பா தியேட்டர் ஜங்ஷன் வந்தபோது அங்கு காவல் ஆய்வாளர் திரு, சுப்பிரமணி, உதவி ஆய்வாளர் திருமதி. தௌலத்நிஷா சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பாலகிருஷ்ணன் தி'ரு,மாசிலாமணி மற்றும் திரு.சம்பத்குமார், திரு. சுந்தர்ராஜன் , காவலர் திரு. கார்த்திக், திரு. ரவி மற்றும் திரு. வெங்கடாசலம் ஆகியோர்கள் இருந்தனர். அவர்களுடன் நானும்வாகன தணிக்கை அலுவலில் இருந்தேன்.

3. சுமார் 4 மணி அளவில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி டாரஸ் லாரி AP 26 X 6829 என்ற லாரியை நிறுத்தி டிரைவர், கிளினரை கீழே இறங்க சொல்லி வாகனத்தை சோதனை செய்த போது டிரைவரும் கிளினரும் தப்பி ஓடிவிட்டனர். வாகனத்தைசோதனை செய்த போது வாகனத்தில் மரங்கள், இருந்தது. அதன் எடை சுமார் 6 ½ டன் இருக்கும் என்று ஆய்வாளர் கூறினார்.

4.பின்னர் சிறப்பு பணிக்கு எங்களை அழைத்த போது நான் மற்றும் மேற்படி காவலர்கள் 21.08.2013 அன்று வாகன தணிக்கையில் இருந்த போது KL 2626 என்ற Innovo Car தடுத்து தணிக்கை செய்த போது ஓட்டுநர் ரவி மற்றும் கிளினர் பாஸ்கர் மற்றும் அவ்ர்களுடன் 3 நபர்கள் இருந்தனர், மேற்படி வாகனத்தில்இருந்தவர்களை விசாரணை செய்தோம், ஆய்வாளர் சந்தேகத்தின் அடிப்படையில் வாகனத்தில் இருந்தவர்களைமகாலிங்கபுரம் காவல் நிலையம் அழைத்துச் சென்றார்,நான் மேற்படி வாகனத்தை மகாலிங்கபுரம் காவல் நிலையத்திற்கு எடுத்துச்சென்றேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**1, 2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(மேற்படி குறுக்குவிசாரணையை 3 முதல் 6 வரை எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது)

மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் என்னை அழைத்த போது லாரியை பிடித்து வைத்திருந்தார்களா என்றால் இல்லை, நான் வந்த பின்பு தான் லாரியை பிடித்தோம்.

மேற்படி லாரி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தது. சம்பவத்தின் போது என்னுடன் சேர்ந்து 5 பேர் வாகன தணிக்கையில் இருந்தோம்.

வண்டியை நிறுத்தியவுடன் டிரைவரும், கிளினரும் இறங்கி ஓடினார்கள் அவர்களை பிடிக்க நாங்கள் முயற்சி செய்தோம் முடியவில்லை.எந்த திசையில் ஓடினார்கள் என்று நினைவு இல்லை. லாரி தார்பாய் போட்டு மூடி இருந்தது, காவலர்கள் தான் எடுத்துப் பார்த்தோம் என்றால் சரிதான். லாரியை ஆய்வாளர்எடுத்துச்சென்றார். நாங்கள் ஓடிய வர்களை தேடிச்சென்றுவிட்டோம்.

யார் யார் எந்த திசையில் தேடிச் சென்றார்கள்என்று எனக்கு நினைவு இல்லை , காவல் ஆய்வாளருடன் யார் சென்றார் என்று எனக்கு தெரியாது. அதன் பிறகு 21.08.2013 அன்று எத்தனை மணிக்கு வாகன தணிக்கைக்கு சென்றோம் என்று நினைவு இல்லை.

Innova Car என்ன நிறம் என்று எனக்கு தற்போது நினைவில்லை அதில் 5 நபர்கள் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களை பிடித்தவுடன் ஆய்வாளர் எங்கு அழைத்துச்சென்றார் என்று தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக யாரும் என்னை விசாரிக்கவில்லை.

சொன்ன சமயத்தில் சொன்ன நேரத்தில் நாங்கள் லாரியை மடக்கி பிடிக்கவில்லை எ ன்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான்இல்லை என்றால் சரியல்ல. புள்ளி விவரக் கணக்கிற்காக போடப்பட்டவழக்கில் எனது உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல. எதிரிகளை மேற்படி காரில் மடக்கி பிடிக்கவில்லை என்றாலும், அவ்வாறு ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.